# சிறுவர்களே உங்களுக்கு.....



ஆக்கம்:
சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர்கள்
(அனைத்து பிரதேச செயலர் பிரிவு)

வெளியீடு:
மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழு
மாவட்ட செயலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச அதிபரின் ஆசிச்செய்தி



"இன்றைய சிறார்கள் நாளைய உலகின் தலைவர்கள்". இச் சிறார்களை உரிய முறையில் அன்பும், அரவணைப்பும் கொடுத்து வளர்க்க வேண்டியது பெற்றோர்களின் தலையாய கடனாகும். நல்லறிவு புகட்டி போசாக்கான உணவூட்டி வளர்ப்பதுடன், நல்ல பழக்கவழக்கங்களையும் அவர்களுக்குக் கற்றுக்கொடுத்தல் அவசியம்.

சிறுவர்களது உரிமைகள் உரிய முறையில் பேணப் படுதல் வேண்டும். அவர்களது கருத்துக்கள், விருப்பங்களுக்கு உரிய மதிப்பளிப் பதனூடாக அவர்களை நற்பிரஜைகளாக உருவாக்க முடியும். அவ்வாறு வளரும் சிறுவர்கள் நல்லதொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கு உறுதுணையாக இருப்பர்.

இத்தகைய சிறார்களை நல்வழிப்படுத்தி வளர்ப்பதற்கு மாறாக அவர்களது உரிமைகளைத் தட்டிக் கழித்து துஷ்பிரயோகம் செய்தல் என்பது அவர்களுக்குச் செய்யும் துரோகமாகும். ஏனெனில், "குழந்தையும், தெய்வமும் குணத்தால் ஒன்று" என்பர். குழந்தைகளைத் தெய்வமாக மதிப்பதனூடாக நாம் தெய்வத்தையே போற்றுகின்றோம் என்ற ஆத்ம திருப்தியினை அடைய முடிகின்றது.

இவ்வகையில் யாழ். மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்களது வெளியீடான "சிறுவர்களே உங்களுக்கு" என்ற இக்கைந்நூலானது சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுக்க வழிசெய்தல் வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் மேற்கொள்வது பாராட்டுக்குரிய விடயமாக இருப்பதோடு, இத்தகைய செயற்பாடானது ஆலய உற்சவ காலங்களில் நிகழ்வதும் நற்பயனைத் தரக்கூடிய ஒன்றாகும்.

கே. கணேஷ்
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

"சிறுவர் துஸ்பிரயோகத்தை இல்லாதொழிப்போம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலதிக அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



சிறார்களே உங்களுக்கு!

உங்களது ஒளிமயமான எதிர்கால நலன் கருதி இக் கைந்நூல் வெளிவருகின்றது. உங்கள் நலனில் அக்கறை காட்டுவதையே தம் பணியாகக் கொண்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் உங்கள் சிந்தனையைத் தூண்டி விழிப்புணர்வை ஏற்படுத்த மேற்கொள்கின்ற இம்முயற்சி உன்னதமானது.

இன்றைய இளைய தலைமுறைதான் மலரப்போகும் நாளைய உலகின் தலைமைப் பிரஜைகள். எனவே வளரும் பயிரை முளையிலேயே நல்லபடி உருவாக்கும் பணி என்பது மகத்தானது. துஷ்பிரயோகங்களில் இருந்து சிறுவர்களைப் பாதுகாத்தல், குற்றங் களில் ஈடுபடாது தடுத்தல், பெற்றோர் சிறார்கள் மத்தியில் நல்ல உறவு நிலையை வளர்த்தல் என்று பல கோணங்களிலும் சிறுவர் களுடைய நலன்களைப் பாதுகாக்கும் முயற்சியில் நடாத்தப்படுகின்ற இப்பணி, உரிய இலக்கினை அடைய வேண்டும். இந்த நல்நோக்கம் வெற்றி பெற்று நாளைய ஆரோக்கியமான தலைமுறைக்கு வழி செய்ய வேண்டும் என்று மனநிறைவோடு வாழ்த்துகின்றேன்.

ஆ.சிவசுவாமி
மேலதிக அரசாங்க அதிபர்,
யாழ் மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டமிடல் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



யாழ் மாவட்டத்தில் சிறுவர்களுக்காக செயற்படுகின்ற சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் சிறுவர் பராயமே ஒரு மனிதனின் இன்றியமையாத பராயம் என்பதைக் கருத்தில் கொண்டு அத்தகைய சிறுவர் பராயத்தில் சிறுவர்களை உரிய முறையில் வழிநடத்துவதனூடாக அவர்களது எதிர்கால வாழ்வினைச் செம்மையாக்க முடியும் என்ற உயரிய நம்பிக்கையில் "சிறுவர்களே உங்களுக்கு" என்னும் கைந்நூலை அவர்களது சுயமுயற்சியில் வெளியிடுவதையிட்டு எனது உள்ளம் உவகையில் திளைக்கிறது.

சிறுபராயத்திலேயே சிறுவர்கள் உரிய முறையில் பராமரிக்கப் பட்டு, அவர்களது தேவைகள், விருப்பு வெறுப்புகள் நிறைவு செய்யப் பட்டாலே அவர்கள் உடல், உள ரீதியில் நல்ல ஆரோக்கியமான நிலையை அடைய முடியும். இந்த ஆரோக்கியமான நிலையே அவர்களின் எதிர்கால வாழ்வைப் பிரகாசமாக்க உதவும். இந்த வகையில் இக்கைந்நூல் சிறுவர் பராமரிப்புத் தொடர்பான பல்வேறு ஆக்கங்களைத் தன்னகத்தே தாங்கி வருவது மிகவும் பயனுள்ள ஒரு வெளியீடாகும் என்பது எனது உறுதியான நம்பிக்கையாகும். இக்கைந்நூலை யாவரும் உரிய முறையில் பயன்படுத்தி உயர்வடைய வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பாகும். மேலும் இக் கைந்நூலினை வெளியிடுகின்ற உத்தியோகத்தர்களின் பணியினை வாழ்த்தி அவர்கள் மென்மேலும் தமது தொழிலில் சிறக்க வாழ்த்துகிறேன்.

கி.குணாளசிங்கம்<br>
திட்டமிடல் பணிப்பாளர்,<br>
மாவட்டச் செயலகம்,<br>
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பாதுகாப்பு இலங்கையின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாண மாவட்டத்தில் பணியாற்றுகின்ற சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்களின் வெளியீடாக "சிறுவர்களே உங்களுக்கு" எனும் கைந்நூல் வெளிவர இருப்பதை அறிந்ததும் பெருமகிழ்ச்சி அடைந்தேன். இன்றைய சிறுவர்கள் நாளைய சமுதாயத்தின் சிற்பிகளாவர். எம்மைச் சூழ வாழும் சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகங்களைத் தடுத்து, குற்றச் செயல்களில் ஈடுபடும் சிறுவர்களுக்கு நல்லறிவு புகட்டி, வேலைக்கு அமர்த்தப்பட்ட சிறுவர்களை கல்விக்கூடங்களுக்கு அனுப்பி அவர்களது உரிமை களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்குமுரியது. அந்தவகையில் வெளிவருகின்ற இக்கைந்நூல் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்களின் தனி முயற்சியாகும். இனிவரும் காலங்களில் இது போன்ற ஆக்கங்கள் வெளிவர வேண்டும் என்பதே எனது ஆவலாகும்.

இக் கைந்நூல் ஆக்க முயற்சிக்காக உழைத்த அனைத்து உத்தியோகத்தர் களுக்கும் எனது உளங்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் நிறைவடைகின்றேன்.

மகேந்திரன்
சிறுவர் பாதுகாப்பு இலங்கை,
யாழ் மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் வாழ்த்துச் செய்தி

யாழ் மாவட்டத்திலிருக்கும் ஒவ்வொரு பிரதேச செயலகங் களிலும் கடமையாற்றுகின்ற சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்களின் தொழிற்திறன் சார்பான சிந்தனை வெளிப்பாட்டின் கருவிலிருந்து வெளிவருகின்ற "சிறுவர்களே உங்களுக்கு" எனும் கைந்நூலையிட்டு நாம் பேருவகை அடைகின்றோம். ஒரு தேசத்தின் தூண்களாக மிளிர்பவர்கள் இன்றைய சிறுவர்களே. எனவே அவர்களை நாட்டின் ஆரோக்கியமான அபிவிருத்திக்கேற்ற வகையில் செதுக்கவேண்டியது எங்கள் ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகும்.

இந்தப் பணியின் ஆரம்ப அத்திவாரமாக வெளிவருகின்ற இக்கைந்நூல் சிறுவர்களுக்கு துஷ்பிரயோகமற்ற பாதுகாப்பான உகந்த ஓர் சூழலை உருவாக்க ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பது எமது உயரிய நம்பிக்கையாகும். இத்துடன் இந்நூலைப் படைக்கின்ற உத்தியோகத்தர்களின் முயற்சியை மனதார வாழ்த்தி, இத்தகைய படைப்புக்களை அவர்கள் மேன்மேலும் படைக்க இறை ஆசியை வேண்டிய இவ்வாக்கத்திற்காக உழைத்த அனைத்து உள்ளங்களையும் அகமகிழ வாழ்த்துகின்றோம்.

கு.சசிகுமார்
உதவி உளசமூக மாவட்ட இணைப்பாளர்,
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை.

இ.தமிழரசன்
உதவி மாவட்ட இணைப்பாளர்,
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| (01) | குற்றங்களுள் சிறுவர்கள் ஈடுபடாது விழிப்பாயிருக்க! | 07 |
| (02) | சிறுவர் இல்லங்களில் சிறுவர்கள் | 08 |
| (03) | சிறுவர் பங்களிப்பு | 09 |
| (04) | சிறுவர் தொழிலாளர் | 10 |
| (05) | சிறுவர் மீதான பாலியல் துஷ்பிரயோகம் | 11 |
| (06) | மாணவர்களிடையே ஏற்படுகின்ற ஒழுக்க பிறழ்வுகள் | 16 |
| (07) | பெற்றோர் பிள்ளைகளிடையே ஆரோக்கியமான உறவுநிலை | 18 |
| (08) | இளயவதுத் திருமணமும் கட்டிளமைப்பருவ கருத்தரிப்பும் | 20 |
| (09) | வன்செயல்களால் பாதிக்கப்படும் சிறுவர்கள் | 22 |
| (10) | பாடசாலை இடை விலகல் | 26 |
| (11) | நன்றியின் நிறைவில் | 28 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றங்களுக்குள் சிறுவர்கள் ஈடுபடாது விழிப்பாயிருக்க!

**அன்பான பெரியோரே!**

- ➢ பள்ளிக்குப் பிள்ளையை அனுப்பவேண்டிய நீங்கள் சிறைக்கூடங்களுக்கு அனுப்பலாமா?
- ➢ உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு ஒளியூட்ட வேண்டிய நீங்கள் அதனை இருளாக்கலாமா?
- ➢ ஏழ்மையிலும் நேர்மையைக் கடைப்பிடிக்க வழிகாட்டுங்கள்.
- ➢ இளமையின் நேர்மை முதுமையில் மேன்மை.
- ➢ 14 வயது வரை கட்டாயக்கல்வி என்பது உங்களுக்குத் தெரியாதா?
- ➢ தீய பழக்கங்கள் கெடுதியைத் தரும் என்பதை மறந்து விட்டீர்களா?
- ➢ நன்மை, தீமைகளைப் பகுத்தறியக் கற்றுக்கொடுங்கள்.

**எங்கள் சிறார்களே!**

- ➢ நேர்மையான பாதையில் சென்றிடுங்கள்.
- ➢ கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன் என்பதை அறிந்திடுங்கள்.
- ➢ சமுதாயத்திற்கு பயன்படக்கூடிய நற்பிரஜைகளாக வாழச் சிந்தியுங்கள்.
- ➢ உண்மை பேசி வாழுங்கள்.
- ➢ உயர்ந்த இலட்சியத்துடன் உங்கள் வாழ்வைத் தொடங்குங்கள்.
- ➢ நன்மையானது எது? தீமையானது எது என்பதைப் பகுத் தறியுங்கள்.
- ➢ தீமையானவற்றை விட்டுவிடுங்கள்.

சிறுவர்கள் குற்றச்செயல்களில் ஈடுபட்டு அச்செயல்கள் உறுதிப் படுத்தப்படும் பட்சத்தில் சிறுவர்களைத் தங்க வைப்பதற்காகவும், அவர்களைச் சீர்திருத்து வதற்காகவும் அமைக்கப்பட்ட இடம்

"சிறுவர் நன்னடத்தைப் பாடசாலை"

எனவே ஒரு சிறுவனை குற்றச்செயல்களுள் ஈடுபடுத்துவதை அறிந்ததும் நாடவேண்டிய இடங்கள்.

**கிராம மட்டம்** ⇒ கிராம அலுவலர் + சமுர்த்தி அலுவலர் + கிராம மட்ட சிறுவர் பாதுகாப்பு குழு அங்கத்தவர் + பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர்

**பிரதேச மட்டம்** ⇒ பிரதேச செயலர்<br>சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர்<br>சிறுவர் நன்னடத்தை அலுவலர்

**மாவட்ட மட்டம்** ⇒ அரசாங்க அதிபர்<br>மாவட்ட சிறுவர் அபிவிருத்தி குழு

இவற்றுடன் வைத்தியசாலையில் இயங்கு அறை எண் 30 இலும் முறையிடலாம்.

*ச.ம.யூ.பிறிட்ஜெட்*
சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்,
பிரதேச செயலகம்,நல்லூர்.

**"சிறுவர்களை குற்றங்களில் ஈடுபடாது பாதுகாப்போம்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் இல்லங்களில் சிறுவர்கள்



- ❋ பிள்ளைகள் பெற்றோரின் விலைமதிக்க முடியாத சொத்துக்கள்.
- ❋ இவர்கள் பெற்றோரின் அன்புக்கு, அரவணைப்புக்கு ஏங்கும் சிட்டுக்கள்.
- ❋ கஞ்சி குடித்தாலும் அம்மாவுடன் இருந்துதான் குடிப்பேன் என்பவர்கள்.
- ❋ தூக்கத்தில் இருந்து கண்விழித்ததும் இவர்கள் அழைக்கும் நபர் அம்மா! அம்மா இல்லாது போனால் அப்பா!
- ❋ தாம் விரும்பிய உணவை விரும்பிய வேளையில் செய்து தருபவர் அம்மா என்பார்கள்.
- ❋ சிறுவர்களுக்கு அக்கா, அண்ணா, தம்பி, தங்கை, பாட்டன், பாட்டி என்று உறவுப் பட்டாளங்களோடு வாழப் பிடிக்கும்.

## ஆனால் சிறுவர் இல்லங்களில்...

- ❋ தனிமை வாழ்க்கை
- ❋ பத்தோடு பதினொன்றாக உணவு உண்ணல்.
- ❋ கொடுத்ததை மட்டும் உண்ணல்.
- ❋ எந்தவேளையும் பயந்த தன்மை.
- ❋ அன்பை வழங்க, அரவணைப்பு வழங்க அம்மா இல்லை.
- ❋ 50 பிள்ளைகளுக்கு 2 அம்மா! போதுமா? அன்பு செய்ய.
- ❋ விரும்பியதை உண்ண முடியுமா? தாத்தா, பாட்டி கதை கேட்க முடியுமா?
- ❋ எதுவுமே இல்லை.
- ❋ அமைதியான மனநிலையில் இருந்து குழம்பிய மனநிலைக்கு செல்கின்றனர்.
- ❋ உற்சாகமான சிறுவர்கள் சோம்பலாகக் காணப்படுகின்றனர்.
- ❋ சோர்வு மனநிலையுடன் அன்பு, பாசத்தை இழந்து உங்கள் பிள்ளைகள் இல்லங்களில் வாழ உங்களுக்கு விருப்பமா?
- ❋ எடுத்திடுங்கள் உறுதியானதும், இறுதியானதுமான தீர்மானம்.

"இல்லங்களில் எமது பிள்ளைகள் வாழ வேண்டாம்"
"பிள்ளைகளுக்கான முழுப்பொறுப்பும் குடும்பமே"

*திருமதி சந்திரா நக்கீரன்*
சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்,
பிரதேச செயலகம், உடுவில்.

**"பெற்றோரின் பொறுப்பை உறுதிப்படுத்துவோம்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பங்களிப்பு (CHILD PARTICIPATION)

**சிறுவர் பங்களிப்பு என்றால் என்ன?**

சிறுவர் ஒருவர் ஒரு நிகழ்வில் பங்குபற்றுதல் அல்லது ஒரு குழுச் செயற்பாட்டில் பங்குகொள்ளுதல் "சிறுவர் பங்களிப்பு" எனலாம். இதற்கு உதாரணமாக சிறுவர் ஒருவர் கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வதனைக் கூறலாம். அதேபோல சிறுவர் ஒருவர் சிறுவர் கழகச் செயற்பாடுகளில் ஈடுபடுவதனைக் கூறலாம்.

இத்தகைய சிறுவர் பங்களிப்பானது சிறுவர்களின் உடல், உள வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். இதனாலேயே 1989ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 1990ம் ஆண்டு உலகின் பல நாடுகளால் பிரகடனப்படுத்தப்பட்ட "சிறுவர் உரிமைச் சமவாயத்தில்" பல உறுப்புரைகள் சிறுவர் பங்களிப்பிற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பனவாக அமைந்துள்ளன.

உதாரணம்:

**உறுப்புரை 31**

சிறுவர்கள் ஓய்வு, பொழுதுபோக்கு மற்று கலாசார நடவடிக்கைகளில் பங்குபற்றும் உரிமை பற்றி எடுத்துரைக்கின்றது.

**உறுப்புரை 14**

சிறுவர்களின் சிந்தனை, மனச்சாட்சி, மதவழிபாட்டுச் சுதந்திரம் பற்றி எடுத்துரைக்கின்றது.

**சிறுவர் பங்களிப்பினால் ஏற்படும் நன்மைகள்**

- சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சிக்கல்கள் வெளிக்கொணரப்படுகின்றன. இது பொருத்தமான தீர்வைப் பெற்றுக்கொள்ள உதவும்.
- உடல், உள வளர்ச்சி.
- சிறுவர்களின் கருத்துக்கள், அனுபவங்கள் பரிமாறப்படுகின்றன.
- மனப்பான்மை வளர்ச்சி (ஒற்றுமை, விட்டுக்கொடுத்தல், பாராட்டுதல், சகிப்புத் தன்மை போன்றன)
- சிறுவர்கள் தமது கருத்தை எடுத்துரைக்க சந்தர்ப்பம் கிடைக்கின்றது.
- சிறுவர்கள் சமூகத்தின் ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடிக்கக் கற்றுக் கொள்கின்றனர்.

இவ்வாறாக பல நன்மைகளினை சிறுவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் சிறுவர் பங்களிப்பை வலுவூட்டுவோம்.

M.சுரேஸ்வரன்
சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்,
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.

**"சிறுவர்களின் பங்களிப்பை ஊக்குவிப்போம்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் தொழிலாளர்

**சிறுவர்களே!**

- சிறுவர்களே 14 வயது வரை கட்டாயக் கல்வி.
- சிறுவர்களே உங்கள் உரிமையை நீங்களே பாதுகாத்துக் கொள்ளுங்கள்.
- சிறுவர்களே உங்களின் எதிர்காலம் கல்வியில் தங்கியுள்ளது. ஆகவே நீங்கள் தொழிலில் ஈடுபடுவதைத் தவிர்த்து கட்டாயம் கல்வியைத் தொடர வேண்டும்.
- கல்வி கற்றல் உங்களின் பிரதான உரிமையாகும். உங்கள் உரிமையை விட்டுக்கொடுக்காதீர்கள்.
- சிறுவர்களே தொழிலில் ஈடுபட்டு உங்களின் காலத்தை வீணடிக்காதீர்கள்.
- உங்களை யாரும் 16 வயதிற்கு முன் வேலையில் ஈடுபடுத்தினால் அவர்களைச் சட்டத்தின் முன் கொண்டுவர உதவுங்கள்.
- உங்கள் சகபாடிகளின் கல்விக்கு உதவிக்கரம் நீட்டுங்கள்.

**பெற்றோர்களே!**

- உங்கள் பிள்ளைகளைப் பாதுகாப்பாக வைத்திருங்கள்.
- அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளியுங்கள்.
- சிறுவர்களை சிறுவர்களாக மதியுங்கள்
- சிறுவர் உழைப்புக்கெதிராக இதயசுத்தியுடன் செயற்படுங்கள்.
- வெள்ளை மனங்கொண்ட பிஞ்சுகளை உடல் வதை செய்யாதீர்கள்.
- கடின வேலைகளைக் கொடுக்காதீர்கள்.
- ஏழ்மையிலும் மேன்மையாக வாழப் பழகுங்கள்.
- உங்கள் பிள்ளையின் எதிர்காலத்தை வீணடிக்காதீர்கள்.
- பெற்றோர்களே 14 வயது வரை கட்டாயக்கல்வி என்பது உங்களுக்குத் தெரியுமா?
- உங்கள் வசிப்பிடத்தில் இவ்வாறான பிரச்சினைகளை இனங்கண்டீர்களா?

**இவ்வாறு சிறுவர்களை ஊழியத்தில் ஈடுபடுத்தினால் நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியவர்கள்**

(a) தொழில் திணைக்கள அதிகாரி
(b) பிரதேச செயலர்
(c) கிராம சேவையாளர்
(d) சமுர்த்தி அலுவலர்கள்
(e) நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (நன்னடத்தை)
(f) சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்
(g) நன்னடத்தை அதிகாரி

ஆகியோரை உடனே நாடுங்கள்

"எமது எதிர்கால சந்ததியின் கல்வியில் அக்கறை கொள்வோம்"

*திருமதி பிருந்தா இந்திரகுமார்*
சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்,
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

**"சிறுவர் உழைப்பை இல்லாதொழிப்போம்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் மீதான பாலியல் துஷ்பிரயோகம்

## சிறுவர்களே........



- ❖ சிறுவர்களே உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்ளுங்கள்.
- ❖ உங்களுக்கு அறிமுகமில்லாத நபர்கள் உங்கள் மீது தொட்டுக் கதைப்பதற்கு அனுமதிக்காதீர்கள்.
- ❖ உங்களை பாலியல் நடவடிக்கைகளில் விளம்பரம் ஊடாக தூண்டுவதற்கு அனுமதிக்காதீர்கள்.
- ❖ உங்கள் உறுப்புக்களை நீங்களே பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

## பெற்றோர்களே.......

- ❖ உங்கள் பிள்ளைகளை உங்கள் பாதுகாப்பில் வைத்திருங்கள்.
- ❖ பிள்ளைகளுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருங்கள்.
- ❖ உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை வீணடிக்காதீர்கள்.
- ❖ ஆபாசப்படங்கள், காட்சிகளை உங்கள் பிள்ளைகள் பார்க்கிறார்களா என அவதானமாக இருங்கள்.
- ❖ பிள்ளைகள் அயல் வீடுகளிலோ, உறவினர் வீடுகளிலோ தனித்து விட்டுச் செல்வதைத் தவிருங்கள்.
- ❖ பாலியல் உறவுக்காக ஆட்சேர்ப்பவர்கள் சிறுவர்களைப் பயன் படுத்துவதைத் தவிர்க்க நடவடிக்கை எடுங்கள்.
- ❖ தடுக்கப்பட்ட உறவு முறையில் பாலியல் உடலுறவு இடம்பெறாமல் விழிப்பாயிருங்கள்.
- ❖ வருங்கால சமூகம் தன்னினச் சேர்க்கையில் ஈடுபடுவதைத் தடுக்க நடவடிக்கை எடுங்கள்.
- ❖ கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து பிள்ளைகளின் கல்வியில் விழிப்பாயிருங்கள்.

"பெற்றோர்களே சிறுவர்களின் பாதுகாப்பில் உங்களின் பொறுப்பை உறுதிப்படுத்துங்கள்"

செல்வி.M.விஜேனாதா
சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்,
பிரதேச செயலகம், காரைநகர்.

**"பாலியல் சுரண்டல்களிலிருந்து சிறுவர்களை மீட்போம்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுவலுவுடைய சிறுவர்கள்

★ இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்.
★ உடல் அங்க குறைபாடு ஓர் ஊனமல்ல.
★ மாற்றவலுவுடையோருக்குத் தேவை அனுதாபம் அல்ல, அன்பும், அரவணைப்பும், பயிற்சியும் ஊக்குவிப்பும்தான்.

## பிள்ளைகளே... (மாற்றுவலுவுடையவர்கள்)

★ பாடசாலையில் அனைத்து மாணவர்களும் சமமானவர்களே.
★ உங்களின் உரிமைகளை மற்றவர்களுக்கு விட்டுக்கொடுக்காதீர்.
★ கல்வி உங்கள் உரிமையே.
★ அனைத்து நிகழ்வுகளிலும் பங்குபற்றும் ஆற்றல் உங்களுக்கு உண்டு.

## பெற்றோர்களே...

★ உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தில் விழிப்பாய் இருங்கள்.
★ இப்பிள்ளைகளின் பாதுகாப்பில் கவனமாய் இருங்கள்.
★ உங்களது அன்பையும், அரவணைப்பையும், பாதுகாப்பையும் பெறுவதென்பது பிள்ளைகளின் உரிமையே.

இப்பிள்ளைகளுக்கு உதவிக்கரம் நீட்டுவோம்.
பிள்ளைகளின் உரிமையை நாம் தட்டிப் பறிக்காதிருப்போம்
நாளைய தலைவர்களுக்கு நாம் வழிகாட்டியாய் இருப்போம்.

"எங்கள் திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்புக்களை உருவாக்குங்கள்"

## யாழ்மாவட்டத்தில் இப்பிள்ளைகளுக்கு கல்வியையும், பராமரிப்பையும் வழங்கும் நிறுவனங்கள்

1. ஆர்க் (ARK) – உடுவில்
உளவிருத்தி குன்றிய சிறுவர்களுக்கான பராமரிப்பு நிலையம்.

2. நவில்ட் பாடசாலை – கைதடி
செவிப்புலன், விழிப்புலன் அற்ற பிள்ளைகளைக் கற்பிப்பதற்கான பாடசாலை.

3. வாழ்வகம் – சுன்னாகம்
செவிப்புலன், விழிப்புலன் அற்ற பிள்ளைகளுக்கான பராமரிப்பு நிலையம்.

4. சிவபூமி பாடசாலை – கோண்டாவில்
உளவிருத்தி குன்றிய சிறுவர்களுக்கான பாடசாலை.

"நாளைய சந்ததியின் எதிர்காலத்தை வளம்படுத்த அனைவரும் ஒன்றுதிரள்வோம்"

திருமதி N.வாணி
சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்,
பிரதேச செயலகம், வேலணை.

"உடற்குறை திறனுக்கு இழுக்கல்ல"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களும் பிறப்புச் சான்றிதழும்

**பெற்றோர்களே, பிள்ளைகளே உங்கள் குடும்பத்தில் எல்லோரிடமும் பிறப்புச் சான்றிதழ் இருக்கின்றதா?**
**இல்லையெனின் இதனைப் படியுங்கள்.**

பிறப்புச் சான்றிதழ் ஒருவரிடம் இருக்க வேண்டிய சட்ட ரீதியான ஆவணமாகும். இது அவரது பெயர், பிறந்த திகதி, பிறந்த இடம், தாய், தந்தையரது பெயர், இனம் போன்ற முக்கியமான விடயங்களை உறுதிப்படுத்த உதவும் சட்டபூர்வமான ஆவணமாகும்.

நீங்கள் பாடசாலைக்குச் செல்லும் காலம் தொடக்கம் உங்கள் வாழ்வின் முக்கியமான தருணங்களிலெல்லாம் உறுதுணையாகும் உற்ற நண்பன்.

**இந்த நண்பன் உங்களிடம் இல்லாவிட்டால்....?**

**சிறுவர்களே நீங்கள்......**

- உங்களுடைய பிறப்பை உறுதிப்படுத்த,
- பாடசாலையில் சேர,
- பரீட்சைகளுக்குத் தோற்ற,

**நீங்கள் வளர்ந்து பெரியவர்களான பிறகு......**

- தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள,
- நீங்கள் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்ற,
- வேலையொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு,
- வெளிநாட்டுக்குச் செல்வதற்கு,
- உங்கள் சொத்துக்களை இழந்திருப்பின் நட்டஈட்டைப் பெற்றுக் கொள்வதற்கு,
- கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்ள,
- திருமணம் செய்வதற்கு,

**நீங்கள் முதுமையடையும்பொழுது.......**

- உங்களுடைய இளைப்பாறுகை விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க

இவ்வாறு உங்கள் வாழ்வின் மாறுதல்கள், முன்னேற்றங்களின் போது உங்களை நிலைநிறுத்திக் கொள்வதற்கு உறுதுணையாகும் உற்ற நண்பன் உங்களது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் ஆகும்.

**பெற்றோர்களே,**

உங்கள் பிள்ளையின் பிறப்பினைப் பதிவுசெய்து கொள்வது உங்களது முக்கிய கடமையாகும். உங்களது பிள்ளையின் எதிர் காலத்தின் சிறப்பைக் கருதி நீங்கள் செய்யும் சிறந்ததொரு முதலீடாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ உங்கள் குடும்பத்தில் எல்லோரிடமும் பிறப்புச் சான்றிதழ் இருக்கிறதா?
➢ உங்கள் பிள்ளைகளின் பிறப்பு பதிவுசெய்யப்பட்டு பிறப்புச் சான்றிதழைப் பெற்றிருக்கின்றீர்களா?

**உங்கள் குழந்தை வைத்தியசாலையில் பிறந்திருந்தால்**

பிள்ளையின் பிறப்பை பதிவு செய்வதற்காக வைத்தியசாலையின் காரியாலயத்திற்கு தேவையான விபரங்களை வழங்கி, குழந்தை பிறந்த பிரதேசத்திற்குரிய பிறப்பு பதிவாளருக்கு பிறப்பு நிகழ்ந்த 03 மாத காலத்தினுள் கிடைக்க ஆவன செய்யவேண்டும். இவ்வாறு உங்கள் பிள்ளையின் பிறப்பு பதிவு செய்யப்படின் பிறப்புச் சான்றிதழ் வழங்கப்படும்.

**உங்கள் குழந்தை வீட்டில் பிறந்திருந்தால்**

பிறப்பு நிகழ்ந்து 07 நாட்களுக்குள் உங்களின் கிராம அலுவலருக்கு பிள்ளையின் பிறப்புக் குறித்து தெரியப்படுத்தி அவரின் அறிக்கையைப் பெற்று உங்கள் பிரதேசப் பதிவாளருக்கு அவ் அறிக்கையுடன் ஏனைய தேவையான விபரங்களையும் வழங்கி பிறப்பைப் பதிவு செய்யுமாறு விண்ணப்பிக்க வேண்டும். இவ்வாறு உங்கள் பிள்ளையின் பிறப்பு பதிவு செய்யப்படின், பிறப்புச் சான்றிதழ் வழங்கப்படும்.

**இவ்வாறு உங்கள் பிள்ளையின் பிறப்பு உரிய காலத்தினுள் (03 மாத காலத்தினுள்) பதியப்படாதவிடத்து,**

காலங்கடந்த பிறப்பைப் பதிவுசெய்வதற்காக பிரதேச செயலகத்தில் வழங்கப்படும் படிவத்தைப் பூரணப்படுத்தி பதிவாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

அத்துடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான படிவத்தைப் பூரணப்படுத்தி பிரதேச செயலக மேலதிக மாவட்ட பதிவாளருக்கு சமர்ப்பித்து தங்கள் பிள்ளை;

➢ வைத்தியசாலையில் பிறந்திருந்தால் வைத்தியசாலைக் கடிதம்.
➢ முதலாம் ஆண்டில் பாடசாலையில் சேர்க்கப்பட்டிருப்பின் பாடசாலைப் பதிவேட்டின் பிரதி விடுகைப்பத்திரம்.
➢ பிறந்தபோது எழுதப்பட்ட சாதகம் அல்லது ஞானஸ்தானம் கொடுக்கப்பட்டிருப்பின் அச்சான்றுப் பிரதி.
➢ தடுப்பூசி மட்டை.
➢ பெற்றோரின் விவாகச் சான்றிதழ்.
➢ பெற்றோரின் பிறப்புச் சான்று (இருப்பின்).
➢ அப்பெற்றோருக்கு பிறந்த ஏனைய பிள்ளைகளின் பிறப்புச்சான்றிதழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பெற்றோருக்குப் பிறந்த அனைத்துப் பிள்ளைகளினதும் விபரம் கொண்ட பட்டியல்.
- பெற்றோரின் அடையாளஅட்டை.
- கிராம அலுவலரின் அறிக்கை.
- உலர் உணவு அட்டை.
- இருவருட தேடுதலுக்கான ரூ. 100 பெறுமதியான முத்திரை.

ஆகிய ஆவணங்களுடன், பிரதேச செயலாளரால் அல்லது மேலதிக மாவட்ட பதிவாளரால் குறிப்பிடப்படும் தினத்தில் நேரடியாகச் சமூகமளித்து, தங்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களைப் பரிசீலித்த பின்னர் அது தொடர்பாக அவ் அலுவலர்கள் திருப்திப்படுமிடத்து உங்கள் பிள்ளையின் பிறப்பு பதிவு செய்யப்பட்டு தங்கள் பிள்ளைக்கு பிறப்புச் சான்றிதழ் வழங்கப்படும்.

**பிறப்புச் சான்றிதழ் தொலைந்திருப்பின்**

உங்கள் பிள்ளையின் பிறப்புச் சான்றிதழ் தொலைந்திருப்பின் பிறந்த இடத்திற்குரிய (பதிவாளர் பிரிவிற்குரிய) பிரதேச செயலகத்திற்குச் சென்று பிறப்புச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்குரிய படிவத்தில் உரிய விபரங்களைப் பூரணப்படுத்தி பதிவு இலக்கம், பதிவுத் திகதி தெரியுமெனின் ஓர் பிரதிக்கு ரூ. 25.00 உம், இலக்கம் தெரியாதெனின் ஓர் பிரதிக்கு ரூ. 50.00 முத்திரையை உரிய கூட்டில் ஒட்டி விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து பிறப்புச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளலாம்.

பிள்ளையின் பிறப்பை பதிவு செய்தல் எவ்வளவு முக்கியமான விடயம் பார்த்தீர்களா?

உங்களது பிள்ளையின் பிறப்பை பதிவு செய்வதற்கு கிராம அலுவலர், பிரதேச செயலர், மேலதிக மாவட்ட பதிவாளர், பிரதேச சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர் உங்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கத் தயாராக உள்ளனர்.

இந்தியாவில் பிறந்த பிள்ளையின் பிறப்பையும் இலங்கையில் பதிவு செய்ய முடியும். இதற்கான விசேட செயன்முறைகள் உள. அவ்வாறான சந்தர்ப்பங்களில் தங்கள் பிரிவு கிராம அலுவலர் ஊடாக மேலதிக மாவட்ட பதிவாளரை நாடுங்கள்.

*செல்வி.மாதங்கி முத்துக்குமாரசாமி*
சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்,
பிரதேச செயலகம்,
தென்மராட்சி.

**"சிறுவர்களே! பிறப்புச்சான்றிதழ் உங்களின் சொத்தாகும்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களிடையே ஏற்படுகின்ற ஒழுக்க பிறழ்வுகள்.

தனி மனித, சமூக நலன்களைப் பாதிக்கக்கூடிய வகையிலான செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடுவதை ஒழுக்கப் பிறழ்வு எனக் கூறிக்கொள்ளலாம். இன்றைய சமூகத்தில் உள்ள மாணவர் களிடையே உள்ள போதைப்பொருட்கள் பாவனை, திரைப்படங்களில் அதீத ஈடுபாடு கொள்ளல், குழு நடத்தைகளில் ஈடுபடல் என்பவற்றை இதற்கான உதாரணங்களாகக் கூறிக்கொள்ளலாம்.

**இவ்வாறான நிலைமைகள் ஏற்படுவதற்கான காரணங்கள்**

- மேலைநாட்டு நாகரிக மோகம்.
- பெற்றார் மற்றும் குடும்ப அங்கத்தவர்களின் அக்கறையின்மை.
- பிள்ளைகள் மத்தியில் கல்வியின் முக்கியத்துவம் பற்றிய தெளிவான விழிப்புணர்வு இன்மை.
- கூட்டுக் குடும்பங்களில் ஏற்பட்டு வரும் பிளவு.
- பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய சரியான வழிகாட்டல் இன்மை.
- ஊடகங்களினை தவறான தேவைகளுக்குப் பயன்படுத்தல்.
- ஒழுங்கற்ற குடும்பச்சூழல்.

**இதனால் ஏற்படும் விளைவுகள்**

- கல்வி நிலையில் ஏற்படும் பாரிய பின்னடைவு.
- மனநிலை பாதிப்படைதல்.
- ஆரோக்கியமற்ற சமூகம் உருவாகுதல்.
- கொலை, களவு போன்ற வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்தல்.
- குடும்ப பிணக்குகளால் ஒற்றுமையின்மை உருவாகுதல்.
- தனி மனித சமூக ஆரோக்கியம் பாதிக்கப்படுதல்.
- தங்கி வாழும் நிலமைகள் அதிகரித்தல்.
- நீண்ட காலத்தில் உளப்பாதிப்பு, தற்கொலை முயற்சிகள் என்பன அதிகரித்தல்.
- சமூக நியமங்கள் சீர்குலைதல்.

**இவற்றுக்கான தீர்வுகள்**

- கல்வி பற்றிய சரியான விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- சமூகத்தில் உயர்ந்த நிலையில் உள்ளவர்களை முன்னுதாரணமாகக் காட்டல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒழுக்க விழுமியங்கள் பற்றி சரியான அறிவைப் புகட்டுதல்.
- ஆரோக்கியமான குடும்ப சூழலை பிள்ளைகளுக்கு வழங்குதல்.
- பெற்றோர்கள் பிள்ளைகளின் நடத்தைகளை அவதானித்தலும் ஒழுங்கு படுத்தலும்.
- நல்ல சமூகச் சூழல் பிள்ளைகளுக்குக் கிடைத்துள்ளதை உறுதிப்படுத்தல்.
- ஒழுங்காகப் பிள்ளைகள் பாடசாலை செல்வதை உறுதி செய்தல்.



பிள்ளைகளின் மத்தியில் உள்ள இவ்வாறான பிறழ்வுகள், நடத்தைகள் ஏற்படும்போது நாம் பாராமுகமாக இருந்து அவர்களை ஒழுங்கான முறையில் கட்டுப்படுத்தாத வேளையில் நீண்ட காலத்தில் இவர்கள் சார்ந்த எதிர்மறையான விளைவுகள் அதிகரித்துக்கொண்டே போகும். இவர்களின் பாதுகாப்பினைப் பேணி சமூகத்தில் நற்பிரஜைகளாக உருவாக்கி, ஆரோக்கியமான சிறுவர் சமூகத்தைப் பேண வேண்டியது சமூகத்திலுள்ள ஒவ்வொருவரதும் பொறுப்பாகும். இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள் எனவே அவர்களுக்கு நல்வழி காட்டி அவர்களின் எதிர்காலம் சிறக்க உதவுவோமாக.



பிள்ளைகளின் நலன்களில் அக்கறை கொள்வோம்
அவர்களது உலகத்தை மகிழ்ச்சியாக்குவோம்
நாளை மணம்வீசும் மலர்களின் வாழ்வில் இன்று ஒளியேற்றுவோம்
அவர்களது எதிர்காலத்தை வளப்படுத்துவோம்.

செல்வி.சுபோதினி
சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்,
பிரதேச செயலகம், சங்கானை

"ஒழுக்க நடத்தையே உங்களுக்கு உயர்வு தரும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோர் பிள்ளைகளிடையே ஆரோக்கியமான உறவுநிலை

இன்று சர்வதேச ரீதியாக வலியுறுத்தப்படும் முக்கிய விடயமாக அமைந்துள்ள விடயம் பெற்றோர், பிள்ளைகளிடையான ஆரோக்கியமான உறவுநிலை குறைவடைந்து வருதலாகும். இம் மண்ணில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் அதன் வளர்ப்பு, வளரும் சூழல், பெற்றோரின் அரவணைப்பு, வழிகாட்டல் முதலான விடயங் களாலேயே தனது எதிர்கால வாழ்வோட்டத்தைத் தீர்மானித்துக் கொள்கிறது. இங்கு பெற்றோர், பிள்ளைகளிடையிலான உறவு என்பது மிகவும் முக்கிய விடயமாக அமைகிறது. உலகளாவிய ரீதியில் பெற்றோர் பிள்ளைகளுடன் செலவு செய்யும் நேரம் போதாது. அவர்கள் பிள்ளைகளுக்கு வழங்கும் வழிகாட்டல் போதாது எனும் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. இதனால் பிள்ளைகளின் எதிர் காலம் சீரழிந்து சின்னாபின்னமாக போயிருப்பதாக சர்வதேச நிறுவனங்கள் ஆருடம் கூறியுள்ளன.

இன்றைய நவீன உலகில் வேலைப்பழு. வருமான வழி தேடல், தொடர் கல்வி போன்ற பல காரணங்களால் பெற்றோர் பிள்ளைகளுடன் செலவு செய்யும் நேரம் மிகக் குறைவாகவே உள்ளது. இந்நிலைமை பிள்ளைகளின் மனதில் அன்புக்காக ஏங்கும் எண்ணம், குரூரமனப்போக்கு, அமைதியின்மை, மனதில் சஞ்சலம், கவலை போன்றவற்றை ஏற்படுத்த வழிவகுக்கிறது. இதனால் அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக மாறும் அபாயநிலை தோன்றியுள்ளது.

இந்நிலை மாறவேண்டும். ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் பெற்றோர் ஒரு மணி நேரத்தையாவது பிள்ளைகளுக்காக ஒதுக்கி அவர்களுடன் உரையாட வேண்டும். எல்லா விடயங்கள் குறித்தும் திறந்த மனத்துடன் கதைக்கும் தரத்துக்கு பிள்ளையை இட்டுச் செல்வதால் பல்வேறு பிரச்சினைகளிலிருந்தும் அவர்களை விடுவிக்க முடியும். இதனால் ஆரோக்கியமான எதிர்காலத்தை அவர்களுக்கு வழங்கமுடியும். அதேவேளை பிள்ளைகளுடன் அளவுக்கதிக நேரத்தைச் செலவு செய்வது பெற்றோர் மீது அவர்களுக்கிருக்கும் நம்பிக்கை, மரியாதையை இழக்கும் நிலையை ஏற்படுத்திவிடலாம். அதிலும் அக்கறை செலுத்த வேண்டும். நேரம் இல்லை என்கின்ற நிலையில் உள்ளோர் குறைந்தபட்சம் ஒருநேர உணவு உண்ணும் போதாவது பிள்ளைகளுடன் நன்கு மனம்விட்டுப் பழகவேண்டும்.

உளவியலாளர் "மேரிஅயன்ஸ்வேர்த்" என்பவர் பிள்ளைகளின் விருத்தியில் பெற்றோர் பங்களிப்பு இன்றியமையாதது என்கிறார். "பற்றுறவு" எனும் சொல் மூலம் அவர் குறிப்பிடுவது யாதெனில், பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையே பற்றுறவு அவசியம் என்கிறார். இவ்வாறு சரியான கவனிப்பில்லாத பிள்ளைகள் சமூக ஒப்புயர்வற்ற, சமூகத்தில் முரண்பட்ட சூழ்நிலையை எதிர்கொள்ளும் பிள்ளையாக மாறும் என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் என்கிற நிலையில் முன்பிள்ளைப் பருவம் (1 - 5 வயது) என்பது தனது பெற்றோரையே முக்கிய அங்கத்தவராக பிள்ளை கருதும் காலம். இக்காலத்தில் அப்பா, அம்மா இருவரதும் அரவணைப்பை மிகவும் எதிர்பார்க்கிறது. முன்பிள்ளைப்பருவ காலத்தில் பிள்ளைகள் கேட்கும் கேள்விகளுக்கு செவிசாய்த்து விளங்கத்தக்க வகையில் விளக்கமளித்தல் நன்று. அக்காலப் பகுதியில் பிள்ளை பெரும்பாலும் தனது அடிப்படைச் சந்தேகங்களைத் தீர்க்க முற்படும் காலமாகும். நாம் பிள்ளை மீது சீறிச்சினந்து கொடுக்கும் பதில்களால் பிள்ளையும் கோபம், கவலை, ஆர்வமின்மை போன்ற நிலைகளை எதிர்கொள்ளலாம்.

முன்பிள்ளைப்பருவம் தாண்டிய, குறிப்பாக 12 வயதின் பின் பிள்ளைகள் தனது கௌரவத்தைப் பாதிக்கும் வகையிலான தண்டனைகள் வழங்கப்படுவதை வெறுக்கிறது. மற்றவர்கள் முன் தண்டனை பெறுவதையோ, தண்டிக்கப்படுவதையோ விரும்புவதில்லை. இவற்றைக் கருத்திலெடுத்து பெற்றோர் பிள்ளைகளின் குற்றங்களைத் நேரான வழியில் கண்டித்தல் நன்மை தரும்.

அடிப்படையில் பெற்றோர் தம் பிள்ளைகளை அவர்களின் உடல், உளரீதியிலான கவனிப்பிலும், பரிவிலும் சிறப்பான திட்ட மிடப்பட்ட நடத்தை மூலம் முன்னெடுப்பதால் அவர்களை நிச்சயம் பயனுள்ள மனிதர்களாக உருவாக்க உதவமுடியும் என்பது உள, சமூக ஆய்வாளர்களின் கருத்தாகும்.



*மா.பத்மராஜ்*
சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்,
உதவி அரசாங்க அதிபர் பணிமனை,
மருதங்கேணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவயதுத் திருமணமும் கட்டிளமைப்பருவ கருத்தரிப்பும்
# (Early Marriage and Teen age Pregnancy)

☆ 18 வயதிற்கு உட்பட்டவர்கள் அனைவரும் சிறுவர்கள் ஆவர். (சிறுவர் உறுப்புரிமை சாசான உறுப்புரை 1)

☆ இலங்கையில் பெண்களுக்கான திருமண வயதெல்லை 18 ஆக சட்டத்தினால் வரையறுக்கப்பட்டுள்ளது.

☆ திருமண வயது 18 ஆக சட்டத்தினால் வரையறுக்கப்பட்டுள்ள போதும், கருத்தரிப்பதற்கு உகந்த வயதெல்லையாக ஆகக் குறைந்தது 20 வயது என மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன.

☆ **கட்டிளமைப்பருவக் கர்ப்பத்திற்கு ஏதுவான காரணிகள்**



➢ இளவயதுத் திருமணங்கள்.
➢ திருமணத்திற்கு முந்திய பாலியல் தொடர்புகள்.
➢ கர்ப்பம் ஏற்படுவது தொடர்பான அறிவின்மை.
➢ கர்ப்பத்தடை முறைகள் தொடர்பான அறிவின்மை.
➢ பாலியல் துஷ்பிரயோகங்கள்.
➢ தவறாக வழிகாட்டும் பொழுதுபோக்கு ஊடகங்கள்.
➢ முறையான பாலியல் கல்வி கற்பிக்கப்படாமை.
➢ குறித்த காலத்திற்கு முன் கல்வியை விட்டுவிலகுதல்.
➢ வறுமை
➢ தாம் வாழும் சமூகப் பின்னணி

☆ 20 வயதிற்கு குறைந்த பெண் உடல், உள ரீதியில் தாயாவதற்கு முழுமையான ஒரு விருத்திநிலையை அடையாததால் இக்கர்ப்பம் ஆபத்து நிறைந்தாகும். மேலும் பல சமுதாயப் பிரச்சினைகளையும் தோற்றுவிக்கும்.

☆ கட்டிளமைப் பருவக் கர்ப்பத்தினால் சிசுமரண வீதம், தாய் இறப்பு வீதம் அதிகமாக ஏற்படுவதுடன், தாய் சரியான போசாக்குள்ள உணவுகள், இரும்பு போலிக்கமில மாத்திரைகள் உட்கொள்ளாததினால் குறைபாடுகள் மற்றும் மூளை விருத்தி அற்ற குழந்தைகள் பிறக்கும் சாத்தியம் அதிகமாகும்.

☆ **கட்டிளமைப் பருவக் கர்ப்பத்தினால் தாய்க்கு ஏற்படும் பாதிப்புக்கள்.**

➢ அதிகளவில் கர்ப்பகால குருதிச்சோகை, கர்ப்பகால குருதியமுக்கம், கர்ப்பகால நீரிழிவு போன்ற நோய்களின் தாக்கம்அதிகளவில் ஏற்படும்.

➢ கர்ப்பப்பை போதிய வளர்ச்சியுறாததால் போதிய சிசுவளர்ச்சி ஏற்படாது. இதனால் சிசுவிருத்தி சீராக இராது. எனவே குறைபாடு உடைய குழந்தை பிறத்தல், கருச்சிதைவு என்பன ஏற்படவாய்ப்பு அதிகம்.

➢ தாயின் பிறப்புக்கால்வாய், இடுப்பு எலும்புகள் போதியளவு வளர்ச்சியடையாதிருப்பதால் சத்திரசிகிச்சை, பிரசவத்திற்கான சாத்தியக்கூறுகளும், அதனால் ஏற்படும் மேலதிக பிரச்சினைகளும் அதிகரிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இளவயதுக் கர்ப்பத்தினால் கர்ப்பப்பை புற்றுநோய் ஏற்பட சந்தர்ப்பம் அதிகமாக உள்ளது.
- வேண்டாத கர்ப்பத்தை அழிப்பதற்கு மேற்கொள்ளும் முயற்சியாலும் (Criminal Abortion), சத்திர சிகிச்சை மூலம் குழந்தை பெறுவிப்பதனால் ஏற்படும் சிக்கல்கள் இறப்பு ஏற்பட சந்தர்ப்பம் அதிகமாகும்.
- பெண் திருமணமாகாதவராயின் சமூகத்தால் ஒதுக்கப்படுவதனால் சமூக அவமானத்திற்கு ஆளாகுகின்ற நிலையில் தற்கொலை முயற்சிகளை மேற்கொள்ளல்.
- தாய் பிரசவத்திற்குப் பின் மன உளைச்சல்களுக்கு ஆளாகுவதனால் குழந்தையை போதியளவு பராமரிக்க முடியாமை.

☆ **சிசுவில் ஏற்படும் பாதிப்புக்கள்**

- முதிராத குழந்தை பிறத்தல்.
- பிறப்பு நிறை குறைவடைதல்
- சிசுமரணம் அதிகரித்தல்.
- சிசுவில் பாலியல் நோய்களின் தாக்கம் ஏற்படல்.

☆ **குழந்தையின் எதிர்காலம்**

- குழந்தையின் பிறப்பை உரிய முறையில் பதியமுடியாமை.
- குழந்தை சமுதாயத்தால் பழிக்கப்பட்டு ஒதுக்கப்படுதல்.
- குழந்தை குரோத மனப்பாங்குடைய, வன்முறைப் போக்குள்ள குழந்தையாக மாறலாம்.

☆ **கட்டிளமைப் பருவத்தில் தாய்மையடைந்த பெண்கள்**

- கர்ப்பகால முன் பராமரிப்பு ஒழுங்காகச் செல்லுதல் வேண்டும்.
- சத்துக் குளிசைகளை வைத்தியரின் ஆலோசனைப்படி உள்ளெடுத்தல் வேண்டும்.
- இரத்தசோகை, இரத்த அழுத்தம் போன்றவற்றைப் பரிசோதித்து உரிய சிகிச்சை பெறல் வேண்டும்.
- பிரசவத்தை சத்திரசிகிச்சை வசதியுள்ள வைத்தியசாலையில் மேற்கொள்ளல் வேண்டும்.
- அடுத்த பிரசவத்தை சில வருடங்கள் பிற்போடுவதற்கு உரிய கருத்தடை முறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

சட்டவிரோதக் கருக்கலைப்பை நாடுதல் தாய்க்கு உயிராபத்தை விளைவிக்கும் அதேவேளை, தண்டனைக்குரிய குற்றமுமாகும். இச் சட்டவிரோத நடவடிக்கையை மேற்கொள்ளுவதும் தண்டனைக்குரிய குற்றமாகும்.

*திருமதி பி.சத்தியவதனி*
சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்,
பிரதேச செயலகம்,சண்டிலிப்பாய்.

**"இளவயதுக் திருமணத்தைத் தவிர்த்திடுவோம்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்செயல்களால் பாதிக்கப்படும் சிறுவர்

★ மோதல்கள் வேறெந்த சக்தியிலும் பார்க்க மிக மோசமான வகையில் சிறுவர்களைப் பல வழிகளிலும் பாதிக்கின்றது.

★ யுத்த வன்முறைகளின்போது உணவுற்பத்தி, வழங்கலில் ஏற்படுகின்ற தடை, உள்ளூர் உற்பத்தி வீழ்ச்சி / சீரழிவு காரணமாக குடும்பங்கள் பொருளாதார ரீதியாக சீரழிதல், கல்வி, சுகாதார - போசாக்கு சேவைகள் வழங்கப்படுதலில் ஏற்படும் தடைகள் / பற்றாக்குறைகள் என்பன சிறுவர் களையே வெகுவாகப் பாதிக்கின்றது எனலாம்.

★ மோதல்களின்போது அதில் அகப்பட்டு பல்லாயிரம் சிறுவர்கள் கொல்லப் படுகின்றனர். கொல்லப்படும் எண்ணிக்கையின் 3 மடங்கினர் பாரதூரமாகக் காயமடைகின்றனர் அல்லது நிரந்தர ஊனமடைகின்றனர்.

★ எண்ணற்ற சிறுவர் வன்செயல்களின்போதான கொலைகள், அழிவுகள், அவலங்களை நேரில் பார்க்கின்ற அதிர்ச்சிதரும், திடுக்கிட வைக்கும் துரதிஸ்ட நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

★ வன்செயல்கள் இடம்பெறும் பகுதிகளில் மனித விழுமியங்கள் பேணப்படாத நிலையில் சிறுவர்கள் கொல்லப்பட்டும், பாலியல் துஸ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்பட்டும், அங்கவீனர்களாக்கப்பட்டும், மனநிலை பாதிப்பிற்குள்ளாக் கப்பட்டும், தகாத செயல்களில் நேரடியாக ஈடுபடுத்தப்பட்டும், கொடுமையாக மிருகத்தனமாக வதைக்கப்படும் நிலைமையையே காணக் கூடியதாக உள்ளது.

★ சிறுவர் உரிமை சமவாயத்தின் 39வது சரத்தில் பின்வருமாறு கூறப்படுகின்றது. எந்த வகையான சுரண்டல், புறக்கணிப்பு, துஸ்பிரயோகம், சித்திரவதை / மிருகத்தனமாக கண்டிப்பு / தண்டனை, ஆயுதப்பிணக்குகள், என்பவற்றினால் பாதிக்கப்பட்ட பிள்ளையொன்று உடல், உள ரீதியாகக் குணமடைந்து, ஆரோக்கியம், கண்ணியம், சுயகௌரவத்துடன் அதன் சமூகத்தில் மீண்டும் இணைந்துகொள்ளச் செய்வதற்கு அவசியமான சகல நடவடிக் கைகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

★ யுத்த நிகழ்வுகளில் சிறுவருக்கு எந்தப் பங்குமே கிடையாதாகையால், சர்வதேச சமூகம் சிறுவர் மீதான வன்செயல்களை வன்மையாகக் கண்டிக்க வேண்டும்.

**கல்விசார் தாக்கங்கள்**

★ யுத்த வன்செயல்களின்போது இழப்புக்களேற்பட்டு, குடும்பங்கள் சீகுலைந்து அச்சமும், குழப்பமுமாக மனவுறுதி தளர்ந்திருக்கின்ற சூழ்நிலையில் பொருளாதார, சமூக சூழ்நிலைகளோடு, கல்வி நடவடிக்கைகளும் சீகுலைந்து விடுகின்றன. பாதுகாப்பற்ற சூழ்நிலையில் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பத் தயங்கும் நிலையும் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ★ சிறுவர்களின் வாழ்வுக்கு உருவையும், கட்டமைப்பையும் கொடுத்து, அவர்களின் உடல், உள, சமூக வாழ்வை மேம்படுத்தி, வாழ்வுக்கு ஒளியூட்டும் கல்வி பாதிப்படைவதால் மனிதப் பண்புகள், ஒழுக்க கலாசார விழுமியங்கள் சீர்குலைந்து, சிறுவர்களின் எதிர்காலமே கேள்விக்குறியாகி விடுகின்றது.

- ★ எவ்வளவு கஷ்ரங்களின் மத்தியிலும் "கல்வி வழங்கல் சேவைகள்" சிறுவருக்கான கல்வி மீள்கட்டுமான செயற்பாடுகள் சகல மனிதாபிமான உதவிகளிலும் பார்க்க மிக முக்கியத்துவம் மிக்க தலையாய அம்சமாகக் கொள்ளப்பட்டு, இயன்றவரை விரைவாகவும், திட்டமிட்ட ரீதியிலும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

- ★ இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வசிக்கும் பிள்ளைகள் கல்விபெற வருவதற்கான தூண்டுதல்களும்,. ஊக்குவிப்புக்களும் வழங்கப்பட்டு பிள்ளைகளுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப் படுவதுடன், அவசர சூழ்நிலைகளில் பிள்ளைகளுக்கு கல்வி / சேவைகளுக்கான நிதி வழங்கும் நிறுவனங்களை ஒருங்கிணைத்து, அடிப்படைக் கல்வி வழங்கும் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

**சுகாதார ரீதியான தாக்கம்**

- ★ யுத்த வன்முறைகளினால் நேரடியாகப் பாதிப்புற்று இறப்புக்குள்ளாதல், போசாக்கின்மையால் வியாதிகளுக்குள்ளாதல், தொற்றுநோய்களால் இறப்புக்குள்ளாதல், உளப்பாதிப்படைதல், ஊனமுறுதல், அனாதையாக் கப்படுதல், கைவிடப்படுதல், அகதியாதல் முதலிய பல்வேறு வழிகளிலும் அதிகம் பாதிப்படைவது சிறுவராகவே காணப்படுகின்றது.

- ★ சிறுவர்களுக்கான நோய்த்தடுப்பு மருந்துகள் வழங்குதல், போசாக்குணவு வழங்குதல், கிரமமான பரிசோதனைகள் போன்ற ஆரம்ப சுகாதார சேவைகள் யுத்த வன்செயல் காலத்தின்போது பாதிக்கப்படுகின்றன.

- ★ நாட்டின் மிக வறிய பகுதிகளில் இடம்பெறும் மேற்படி விளைவுகள் அப்பகுதிகளுக்கான ஆரம்ப சுகாதாரத் துறைக்கு ஒரு பெரும் தடையாகவே அமைகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ இங்கு சிறுவர் உரிமைகள் பற்றிய மேலதிக பிரசாரங்களை மேற்கொள்வதுடன், சிறுவர் உரிமை மீறல்களை அறிக்கையிடுதல்களுக்கும் ஊக்கப்படுத்தப்படல் வேண்டும்.

## உளவியல் ரீதியான தாக்கம்

★ யுத்த வன்செயல்களின்போது பிள்ளைகள் தங்கள் பெற்றோர், மூத்த சகோதரர்கள், பெரியவர்கள் கொலைசெய்யப்படுவதை/ கைதுசெய்யப் படுவதை / சித்திரவதை அல்லது கொடுமைகளுக்கு உள்ளாக்கப் படுவதை, பாலியல் துஸ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படுவதை நேரடியாகக் காண்பதால், அல்லது தானே மேற்படி வன்முறைகளுக்க உள்ளாக்கப் படும்போது அவர்களின் நம்பிக்கைகள் தாக்கத்திற்குள்ளாகி, அச்ச உணர்வு அதிகரித்து உளப்பாதிப்புக்கள் ஏற்பட்டு அவர்களின் வாழ்வுக்கான அடித்தளமே நாசமாக்கப்படுகின்றது.

★ திடுக்கிடத் தகுநிலையில் ஏற்படும் மேற்படி வன்செயல்களினால், பிள்ளைகள் மன அதிர்ச்சிக்குள்ளாகி, தம் குடும்பங்களிலிருந்து தாம் பிரிக்கப்பட்டு விடலாமென்ற துயருடன், நித்திரை குழம்பி, விளையாட்டில் அக்கறையின்றி, சிரிப்பை மறந்து, உணவில் ஆர்வமன்றி, பாடசாலைக் கல்வியில் அக்கறையின்றி, மனம் இடிந்துபோய் எதிர்காலத்தின் மீதான நம்பிக்கை இழந்தவர்களாக, வன்முறைப்போக்குக் கொண்டவர்களாக மாறிவிடும் நிலமை உருவாகி விடுகின்றது.

★ மேற்படி வன்செயல்களின்போது பிள்ளை அனுபவித்த இழப்பு, கவலை, அச்சம், குடும்பப் பிரிவு, சமூகச் சிதறடிப்பு என்பன அப்பிள்ளையின் "பிள்ளைப் பராயத்தையே சீர்குலைத்து விடாதிருக்க, அப்பிள்ளையின் அபிவிருத்திக்கு உள்ளமைவாக உள்ள "உளவியல் அக்கறைகள் / பராமரிப் புக்கள்" என்பன சமூகத்தின் பூரண ஒத்துழைப்புடன் உரிய காலத்தில் வழங்கப்பட வேண்டும்.

★ உளம் பாதிக்கப்பட்ட பிள்ளை மீது அதிக அக்கறை காட்டிப் பாதுகாப்பதுடன், உள்ளூர்ப் பண்பாடு, கலாச்சார, ஒழுக்க விழுமியங்களுடனான பேணல்", "சுகப்படுத்தும் படிமுறை' (அப்பிள்ளையின் சகஜ நிலை உணர்வை மீள ஏற்படுத்துவதுடன், ஒரு குறிக்கோள் உணர்வை வளர்த்து, தன் மதிப்பை உணரச் செய்வதுடன் தன்னை யாரென இனங்காண வைத்தல்) முதலியவற்றைக் கையாள்வதுடன், நாளாந்த வேலைகள் / நியமங்களில் ஈடுபடச்செய்தல், நாடகம், விளையாட்டு, ஆடல், பாடல், படங்கீறுதல், கதைசொல்ல வைத்தல் போன்றவற்றின் மூலம் அப்பிள்ளையின் அறிவு, உணவு போன்றவற்றுக்கான தூண்டுதலை அளிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ வன்முறைகளிலிருந்து சிறுவரைப் பாதுகாத்தலென்பது ஒரு தேசிய விடயம் மாத்திரமல்ல. அது சர்வதேச சமூகத்தின்கூட்டு அக்கறையுடன் சம்பந்தப் பட்டது. எனவே இப்படியானதொரு நிலை தொடர்ந்தும் நிகழ இடங் கொடாமல், சிறுவர் நலனில் அக்கறை கொள்ளத்தக்க வகையில் அனைத்துத் தரப்பினரும் இணைந்து செயற்பட வேண்டும். பாதிக்கப்பட்ட சிறுவர் தொடர்பான விபரங்கள் சேகரிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட சிறுவர் தொடர்பான விபரங்கள் சேகரிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டும். சிறுவர் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் பரவலாக ஏற்படுத்தப்படுவதுடன், யதார்த்தப் புறநிலைகள் பற்றிய ஒரு தொலைநோக்கோடு பிள்ளைகளைப் பாதுகாப்பதற்கான முன்மாதிரியான திட்டங்கள் வகுக்கப்படும்போதுதான் அதன் இன்றைய உடனடிப் பாதிப் புக்களை மட்டுமல்லாது எதிர்கால விளைவுகளையும் தவிர்க்கமுடியும்.

*செல்வி.நா.யோகேஸ்வரி*
சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்,
பிரதேச செயலகம்,
பருத்தித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை இடைவிலகல்

18 வயதிற்கு உட்பட்ட சிறுவர்கள் அனைவரும் பாடசாலைக் கல்வியை அவசியம் பெறவேண்டும். கல்வியறிவினூடாக கிடைக்கும் நன்மைகள் அவர்களுடைய வாழ்க்கையை மேலும் வளர்த்துச் செல்லும். உலகில் பாடசாலை செல்லும் வயதுடைய சுமார் 130 மில்லியன் பிள்ளைகள் பாடசாலை செல்வதில்லை. இதன் விளைவாக எதிர்கால உலகில் ஆறில் ஒரு பங்கினர் எழுத்தறி வற்றவர்களாக இருப்பார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இப் புள்ளி விபரங்கள் நாம் எதிர்நோக்கியுள்ள சவாலின் தாற்பரியத்தை புலப் படுத்துகின்றன.

சமூக மேம்பாட்டிற்கும் பொருளாதா வளர்ச்சிக்கும் கல்வி இன்றியமையாதது என்பதை எவரும் மறுக்கமாட்டார்கள். "கல்வி அடிப்படை உரிமை" என சிறுவர் உரிமைச் சமவாயம் உறுப்புரை - 28 விதந்துரைக்கின்றது.

கல்வியானது முறைசார்ந்த கல்வி (Formal Education), முறைசாரா கல்வி (Non - Formal Education) என்ற வகையாக போதிக்கப்படுகின்றது. முறைசார்ந்த பாடசாலைக் கல்விடை இடை நிறுத்துகின்ற சிறுவர்களே பாடசாலையிலிருந்து இடைவிலகிய சிறுவர்களாக (School Drop Outts Children) கணிக்கப்படுகின்றனர்.

இலங்கையில் அமுலிலுள்ள கட்டாயக் கல்வி (Compulsory Education) என்பது ஐந்து வயதிற்கு குறையாமலும், பதினான்கு வயதிற்க மேற்படாமலும் உள்ள சிறுவர்கள் கட்டாயக் கல்வியைப் பாடசாலைகள் மூலம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதாகும். இவ் வயதுப் பிரிவினுள் பாடசாலையிலிருந்து விலகிய சிறவர்கள் பாடசாலை இடைவிலகியவர்களாக அடையாளப் படுத்தப்படுகின்றனர்.

பாடசாலை இடைவிலகலுக்கான காரணங்களாக குடும்ப பொருளாதார நெருக்கடி, பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடல், ஆர்வமின்மை, உடல்நலக் குறைவு போன்றவற்றை இனங்காணக் கூடியதாக உள்ளது. பாடசாலை இடைவிலகலின் பின்னரான செயற் பாடாக சிறுவர் ஊழியம் (Child Labour) விளங்குகின்றது. சுகயீனம் காரணமாக பாடசாலை இடைவிலகியோர் தொடர்ந்து பாடசாலைக்கோ, தொழிலுக்கோ செல்லாது பாடசாலையிலிருந்து விலகி வீட்டிலேயே தங்கிவிடுகின்றனர். சிறுவர்கள் தொழிலுக்கு செல்லுதல், வீட்டுவேலை, இளையோரைப் பராமரித்தல், நோயுற்ற முதியவரைப் பராமரித்தல் போன்ற காரணங்களினால் பாடசாலைக் கல்வியைத் தொடரமுடிவதில்லை.

உரிய வயதில், உரிய தரத்தில், உரிய திறனில் பாடசாலை கல்வியைத் தொடரமுடியாத சிறுவர்கள் சக மாணவர்களால் ஓரங் கட்டப்பட்டு இறுதியில் தாழ்வுச் சிக்கல்களால் பாடசாலையிலிருந்து இடைவிலகிவிடுகின்றனர்.

பாடசாலையிலிருந்து இடைவிலகும் சிறுவர்கள் குற்ற நடத்தைகளுக்கு துணைபோதல், குழுநடத்தை, வன்போக்கு, இளவயது திருமணங்கள் போன்ற சமூக எதிர்நடத்தைகளில் ஈடுபடுகின்றனர். இவற்றைத் தவிர்க்க பாடசாலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகம் ஆகியவற்றுக்கிடையில் ஒன்றிணைப்புத் தன்மை தோற்றுவிக்கப்பட வேண்டும்.

பாடசாலை இடைவிலகல் இன்று சிறுவர் கல்விக்கு பெரும் சவாலாக அமைந்துள்ளது. சமூக மேம்பாட்டிற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் கல்வி இன்றியமையாதது என்பதை எவரும் மறுக்கமாட்டார்கள்.

**பாடசாலை இடைவிலகலுக்கான காரணங்கள் பின்வருமாறு**

(01) குடும்ப பொருநாதார நிலைமை (வறுமை)
(02) சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுதல்.
(03) ஆர்வமின்மை
(04) உடல், உளநலக் குறைவு
(05) மதுப்பாவனை
(06) வீட்டுவேலை, முதியவர்களைப் பராமரித்தல்
(07) குடும்ப கட்டமைப்பு மாற்றம்
(08) யுத்தமும் இடப்பெயர்வும்
(09) போதி வழிகாட்டல் இன்மை.

**பாடசாலை இடைவிலகல் தவிர்ப்பதற்கான ஆலோசனைகள்**

(01) பெற்றாருக்கும், சிறுவருக்கும் இடையில் கல்வியின் மகத்துவம் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தல்
(02) தொடர்ச்சியான வழிகாட்டல்
(03) மாணவர்கள் கல்வியில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை சுமூகமான முறையில் தீர்த்தல்.
(04) பாடசாலையில் கட்டாய கல்விக்குழுக்களை வினைத்திறனுடன் செயற்படுத்தல்.
(05) கற்பித்தலை கவர்ச்சிகரமான முறையில் வழங்கல்.
(06) ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையே ஆரோக்கியமான உறவைப் பேணல்.
(07) மாணவர்களிடையே சுயமதிப்பை உயர்த்துவதற்கு கல்விச்சீாமியம் வழங்கப் பட வேண்டும்.
(08) மாணவர்களிடையே பாகுபாடற்ற மனப்பாங்கை வளர்த்தல்.
(09) சிறந்த உளவளத்துணை மாணவருக்கு வழங்கப்பட வேண்டும்.
(10) பெற்றோரின் வறுமைய நிலையை நிவர்த்திசெய்ய ஆவனசெய்தல்.
(11) கல்வி மாணவர்களின் உரிமை என்பதனை ஆணித்தரமாக வலியுறுத்தல்.
(12) மாணவர்களை வெகுமதிகள் மூலம் ஊக்குவித்தல்.
(13) மாணவர்களின் கல்விக்கு உகந்த சூழலை உருவாக்கல்.

இச் செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மாணவர்களின் இடைவிலகலை கணிசமான அளவு குறைத்து சமூக மேம்பாட்டினை எதிர்காலத்தில் ஏற்படுத்த முடியும்.


*செல்வி.வரதீஸ்வரி செல்வராஜா*
சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்,
பிரதேச செயலகம், வலி.கிழக்கு,கோப்பாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியின் நிறைவில்....

"சிறுவர்களே உங்களுக்கு" எனும் கைந்நூலினை சிறந்த முறையில், குறுகிய காலத்தில் அமைத்து முடிக்க தமது ஆக்கங்களை வழங்கிய ஒவ்வொரு சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர்களுக்கும் முதலில் நிறைவான என் நன்றியைத் தெரிவிக்கின்றேன். மேலும் இவ் ஆக்கங்களை வெளியிடுவதற்கான அனுமதியை அளித்த அரச அதிபருக்கும், மற்றும் மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவிற்கும் சிறப்பான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் இக் கைந்நூலிற்கான வாழ்த்துரைகளை வழங்கிய அரசாங்கத அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், திட்டமிடல் பணிப்பாளர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை உத்தியோகத்தர்கள், சிறுவர் பாதுகாப்பு இலங்கை அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் இக் கைந்நூலினை வெளியிடுவதற்கான நிதி அனுசரணை வழங்கி ஒத்துழைப்பு வழங்கிய சிறுவர் பாதுகாப்பு இலங்கைக்கு சிறப்பான நன்றியைத் தெரிவித்து, இக்கைந்நூலினை குறுகிய காலத்தில் விரைவாக வெளிவருவதற்கு உதவிய சண்சைன் கிரபிக்ஸ் - இணுவில் ஸ்தாபனத்தினருக்கு நன்றியைத் தெரிவிப்பதோடு, இச்செயற்பாடுகள் மேலும் சிறப்பாக வளர இறைவனை வேண்டி நன்றியில் நிறைவடைகின்றேன்.

ச.ம.யூ.பிறிட்ஜெட்
(மாவட்ட இணைப்பாளர்)
சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்,
பிரதேச செயலகம்,
நல்லூர்.



"சிறுவர்களுக்கு வளமான வாழ்வினை அமைத்திடுவோம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











அட்டை வடிவமைப்பு
இ.தமிழரசன்

அனுசரணை:
சிறுவர் பாதுகாப்பு இலங்கை, யாழ்ப்பாணம்

சன்சைசன் கிராபிக்ஸ் · கே.கே.எஸ் வீதி இணுவில். 0777 592593

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org